# The Anti-Racism Observatory

ஸ்காட்லாந்து அரசாங்கமும், பிற பொதுத்துறை நிறுவனங்களும் இனவெறிக்கு எதிரான தங்களுடைய பொறுப்பை நிலைநிறுத்தும் பொருட்டு- கண்காணிப்பகம்- என்ற ஒரு புதிய அமைப்பை ஸ்காட்லாந்து உருவாக்கவிருக்கிறது. இனவெறி எப்படி செயல்படுகிறது என்பது குறித்த உள்ளூர் அளவிலான, தேசிய மற்றும் சர்வதேச அளவிலான நிபுணத்துவத்தை கண்காணிப்பகம் அளிக்கும். இது ஸ்காட்லாந்து அரசாங்கத்திற்கு நீடித்த நிலையான இனவெறி எதிர்ப்பு கொள்கைகளையும், நடைமுறைகளையும் அளிப்பதில் உதவிடும். ஸ்காட்லாந்தின் இனவெறி எதிர்ப்பு நடவடிக்கைகள் இனவெறியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகரமாக உள்ளது என்பதை உறுதி செய்யும் பொருட்டு உங்களிடம் விபரங்களைக் கேட்டறிய நாங்கள் விரும்புகிறோம்.



## இதை நாங்கள் ஏன் இப்போது செய்கிறோம்?

உலக அளவில் கோவிட்-19 பெருந்தொற்றானது இனம் சார்ந்த சமத்துவமின்மையை வெளிப்படுத்தியுள்ளது. இனம் சார்ந்த சமத்துவமின்மைக்கு,  குறிப்பாக சுகாதாரம் சார்ந்த சமத்துவமின்மைக்குத் தீர்வு காண்பதற்கான தனது பொறுப்புடைமையை ஸ்காட்லாந்து அரசாங்கம் அதிகரித்துள்ளது. 2030 இல் "அனைவரும் தங்கள் இல்லத்தில் இருப்பதாக உணரக்கூடிய"[1] ஒரு நியாயமான, அனைவரையும் உள்ளடக்கிய ஒரு ஸ்காட்லாந்தை உருவாக்க வேண்டும் என ஸ்காட்லாந்து உறுதி பூண்டுள்ளது. இந்த வேகத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் மற்றும் இந்த பொறுப்புடைமையைக் கண்காணிக்கவும், உணர்ந்துகொள்ளவும் உதவும் ஒரு முக்கிய படியாக கண்காணிப்பகம் உள்ளது.

[1] https://www.gov.scot/publications/fairer-scotland-action-plan/

# இதற்கு முன்பு என்ன நடந்துள்ளது மற்றும் அது ஏன் பயனளிக்கவில்லை?

ஸ்காட்லாந்தில் இனம் சார்ந்த சமத்துவம் தொடர்பாக கடந்த 20 ஆண்டுகளில் 817 பொறுப்புடைமைகள் மற்றும் நடவடிக்கைகள்[2] கொண்ட 39 கொள்கைகள் நடைமுறையில் இருந்து வந்துள்ளன. இவையெல்லாம் நடைமுறையில் இருந்த போதிலும் சிறிதளவு முன்னேற்றமே ஏற்பட்டுள்ளது. இந்த வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளபடி, முன்னேற்றத்தைத் தடுக்கும் ஒரு தீங்கு விளைவிக்கும் சுழற்சி இதில் இருப்பதாக இன சமத்துவம் மற்றும் உரிமைகளுக்கான கூட்டணி (CRER) மேற்கொண்ட சமீபத்திய ஆய்வுகள் சுட்டிக்காட்டிக் காட்டியுள்ளன.

1. முதலில், ஒரு புதிய "இன சமத்துவத்திற்கான" முயற்சி அறிவிக்கப்பட்டவுடன், அது மிகப்பெரிய விளம்பரத்துடன் வெளிவருகிறது, ஆனால் இதற்கு முன்பாக வெளிவந்தவற்றிற்கு குறைவான கவனமே அளிக்கப்படுகிறது.
2. சமூகத்திலிருந்து பெறப்படும் உள்ளீடுகளைக் கொண்டு என்ன செய்யப்பட்டது என்பது சமூகத்திற்குத் தெரிவிக்கப்படவில்லை மற்றும் முடிவுகள் எடுக்கப்படுவதில் சமூகமானது உள்ளடக்கப்படவில்லை.
3. எனவே, புதிய கொள்கைகள் தொடங்கப்படும் போது, பொருத்தமற்ற நடவடிக்கைகளால் அவை தோல்வியடைகின்றன.

CRER
coalition for racial equality and rights

| | | |
|---|---|---|
| 1 | புதிய மேம்பாடு அறிவிக்கப்பட்டது | நேர்மறையான பேச்சு |
| | | சமீபத்திய சொற்றொடர்கள் |
| 2 | ஆதாரம் மற்றும் ஈடுபாடு | அதே பிரச்சினைகள் |
| | | ஆலோசனை சோர்வு |
| 3 | வரைவுகள் மற்றும் முடிவுகள் | நிறுவனத்தின் செயல்திட்டங்களுக்குப் பொருந்தும் வகையில் கிடைக்கப்பெறும் ஆதாரங்கள் தேர்வு செய்யப்படுகின்றன |
| 4 | தொடங்குதல் | ஆர்வம் உச்சநிலையை அடைதல்! |
| 5 | வீழ்ச்சியடைதல் | நடவடிக்கைகள் தோல்வியடைதல்- அவர்களுடைய நடவடிக்கைகள் தவறாக இருந்தன |
| | | ஊழியர் அல்லது தலைமையில் மாற்றம் |
| | | முன்னுரிமைகள் மாறுதல் |

[2] https://www.gov.scot/publications/crer-anti-racist-policy-making-scotland-review-summary/

இந்தத் தோல்விக்கு யாரும் பொறுப்பேற்பதில்லை, ஏனென்றால் இந்தக் கொள்கைகளை வழங்கும் மக்களிடம் ஒரு தொடர்ச்சி இல்லை மற்றும் அரசியல் முன்னுரிமைகள் மாறிக்கொண்டே வருகின்றன.

# கண்காணிப்பகம் எவ்வாறு வேறுபட்டதாக இருக்கும்?

இனவெறியால் பாதிக்கப்பட்ட சமூகங்களில் ஒரு நேர்மையான, நீண்ட கால மாற்றத்தை உருவாக்க, கண்காணிப்பகம் பின்வருமாறு செயல்படும்:

1. **இனவெறி எதிர்ப்பை கடைபிடிக்கும்:** நமது அமைப்புகளிலும், நிறுவனங்களிலும் (உ.ம். நிறுவனங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் NHS உள்ளிட்ட பொதுச் சேவைகள் மற்றும் ஸ்காட்லாந்து அரசாங்கம்) உட்பொதிந்துள்ள மற்றும் வலுவாக நிலைகொண்டுள்ள இனவெறியின் நடைமுறைகளை நாம் செயல்திறனுடன் தகர்த்தெறிய வேண்டும்.
2. **கண்காணிப்பகம் சமூகங்களால் வழிநடத்தப்படும்**: இனவெறியால் பாதிக்கப்பட்ட சமுகங்களின் பெயரில் உருவாக்கப்பட்ட கொள்கைகள் அவர்களாலேயே வழிநடத்தப்பட வேண்டும்.
3. **கண்காணிப்பகம் சமூகங்களுக்கான பொறுப்புடைமையை ஊக்குவிக்கும்:** ஏற்கனவே என்ன நடந்துள்ளது என்பதை அரசாங்கம் தெரிந்துகொண்டு, இனவெறி எதிர்ப்புக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணித்து, அதில் ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்து இனவெறியால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.
4. **கண்காணிப்பகம் இனவெறியால் பாகுபடுத்தப்பட்ட சமூகங்களைப் பாதுகாக்கும்:** இனவெறி எதிர்ப்பு கொள்கைகளை வடிவமைக்க இனவெறியால் பாதிக்கப்பட்ட சமூகங்களில் பாதுகாப்பான இடங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

# கண்காணிப்பகம் என்ன செய்யும்?

பின்வரும் செயல்பாடுகள் கண்காணிப்பகத்திற்காக முன்மொழியப்பட்டுள்ளன. எனினும், இது தொடர்ந்து நடைபெற்று வரும் ஒரு பணியாகும் மற்றும் இது குறித்து நாங்கள் உங்களிடம் கேட்டறிய விரும்புகிறோம். இந்தச் செயல்முறையில் ஓர் இணை வடிவாக்கம் உள்ளடங்கியுள்ளது. அது மக்களுடன் இணைந்து கண்காணிப்பகத்தை வடிவமைக்கிறது, எனவே இங்கே முன்மொழியப்பட்டவற்றிலிருந்து கண்காணிப்பகத்தின் செயல்பாடுகள் வேறுபட்டதாக இருக்கக்கூடும்:

1. இனவெறி மற்றும் இனவெறி எதிர்ப்பு தொடர்பாக முன்பு நடைபெற்ற மற்றும் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் பணிகளை விவரணையாக்கம் செய்வதன் மூலமாகவும், குறியிட்டு வரிசைப்படுத்துவதன் மூலமாகவும் நம்மால் அவற்றைக் கண்காணிக்க முடியும். பொதுவெளியில் கிடைக்கப்பெறும் ஊடாட இயலும் வரைபடத்தில் சுகாதாரம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றும் சமூகங்களைப் பாதிக்கும் பொருளாதார ரீதியான, வரலாற்று ரீதியான, கலாச்சார ரீதியான மற்றும் அரசியல் ரீதியான காரணிகள் ஆகியவை உள்ளடங்கும்.

2. பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்களில் இருந்து இனவெறி மற்றும் இனவெறி எதிர்ப்பு தொடர்பாக பெறப்படும் தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்.
    - இனவெறி எதிர்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு தரவுகளைப் பயன்படுத்தும் சிறந்த நடைமுறையைக் கண்காணிப்பகம் உருவாக்கும்.

3. பொதுத்துறை நிறுவனங்களில் இனவெறி எதிர்ப்புக்கு ஸ்காட்லாந்து அரசாங்கத்தை பொறுப்பு வகிக்கச் செய்தல், உ.ம்.:
    - நிறுவனங்கள் தங்களுடைய இனவெறி எதிர்ப்புச் செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளை உருவாக்க வேண்டும்.
    - நிறுவனங்கள் இனவெறி தொடர்பான தரவுகளில் உள்ள இடைவெளிகளையும், அந்த இடைவெளிகளின் பின்விளைவுகளையும், அவற்றை எவ்வாறு கடந்து செல்லமுடியும் என்பதையும் மதிப்பீடு செய்ய வேண்டும்.

4. நிறுவனங்களுக்கும், இனவெறியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடையேயான ஒத்துழைப்பை ஊக்குவித்தல்.

5. இனவெறியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களுடன் சேர்ந்து இனவெறி எதிர்ப்புக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை இணைவடிவாக்கம் செய்ய ஆதரவு அளித்தல்.

கண்காணிப்பகம் குறித்தும், ஸ்காட்லாந்தில் மாற்றத்தை உருவாக்கும் கொள்கையை வழங்க அதனால் எவ்வளவு சிறப்பாக பணியாற்ற முடியும் என்பது குறித்தும் உங்கள் எண்ணங்களை உங்களிடமிருந்து கேட்டறிய நாங்கள் விரும்புகிறோம்.

## மேலும் தகவல்களுக்கு, நீங்கள் எங்களுக்கு iggantiracism@gmail.com .

